**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

## SC.No.65/2024 – PW-5

| | |
|---|---|
| Name | திரு.ராம்குமார் |
| Husband/Father Name | கிருஷ்ணமூர்த்தி |
| Village /Area | சிறுவளையம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 27 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.08.2025.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேல்பாக்கம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கனிமொழி அம்மாவினுடைய பக்கத்து வீட்டில் நான் வசிக்கிறேன். வீட்டில் இருப்பவர்களின் சத்தம் இரவு சுமார் 11.00 மணியளவில் கேட்டது. சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது கனிமொழி குழந்தையை தூக்கிக்கொண்டு வெளியே ஓடி வந்தார். என் குழந்தையை காப்பாற்றுகங்கள் என்று கூறினார். நான் உடனடியாக அவருடன் புதுப்பட்டு மருத்துவமனைக்கு குழந்தையை தூக்கி சென்றோம். அங்கிருந்து வாலாஜா அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லுமாறு கூறினார்கள். மருத்துவமனையில் குழந்தையை சிகிச்சைக்கு அனுமதித்த போது குழந்தை இறந்து விட்டதாக மருத்துவர் கூறினார். இந்த குழந்தை பிரேத விசாரணையில் பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

குழந்தையை தூக்கிக்கொண்டு நான் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன். எங்களுக்கு பின்னால் ஆஜர் எதிரி மருத்துவமனைக்கு வந்தார்.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**